புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 79 | 24-09-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 79 | 24-09-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## 72வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா: நடிகர்கள் மம்மூட்டி, தனுஷ், ஜி.வி.பிரகாஷுக்கு விருது

### குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார்



ஏக்தா (குஜராத்): செப்.24–

72வது ஆண்டு தேசிய திரைப்பட விருதுகளை திரைக் கலைஞர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று வழங்கினார். நடிகர்கள் தனுஷ், மம்மூட்டி, இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்டோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்திய திரைப்படத் துறையின் மிக உயரிய கவுரவமாகக் கருதப்படும் 72வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நேற்று குஜராத்தின் ஏக்தா நகரில் (முன்பு கெவாட்டியா என்று அழைக்கப்பட்டது) மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

தேசிய திரைப்பட விருது விழாக்கள் இது வரை டெல்லி விக்ஞான் பவனில் மட்டுமே நடத்தப்பட்டு வந்தன. இந்நிலையில் இந்த தேசிய விருதுகள் விழாவை, நாட்டின் பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற மத்திய அரசின் புதிய முடிவின்படி, முதன்முறையாக டெல்லிக்கு வெளியே குஜராத் மாநிலத்தில் உள்ள ஏக்தா நகரில் நடத்தப்பட்டது.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்று, 2024ம் ஆண்டுக்கான சிறந்த திரைப் படங்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

சிவகார்த்திகேயன், சாய் பல்லவி நடிப்பில் தமிழில் 2024ல் வெளியான அமரன் படத்துக்காக சிறந்த பின்னணி இசைக்கான விருதை குடியரசு தலைவரிடம் இருந்து ஜி.வி. பிரகாஷ் பெற்றுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து சிறந்த தமிழ்ப்படம் என்ற வகையில் தேர்வான ராயன் திரைப் படத்தை இயக்கியதற்காக நடிகர் தனுஷ் தேசிய விருதை பெற்றுக் கொண்டார்.

2024ம் ஆண்டின் தேசிய சிறந்த நடிகருக்கான விருது 2 பேருக்கு வழங்கப்பட்டது. மலையாளப் படமான பிரம்மயுகம் படத்துக்காக சிறந்த நடிகருக்கான விருதை நடிகர் மம்மூட்டி பெற்றுக் கொண்டார். இந்திப் படமான சந்து சாம்பியன் படத்தில் நடித்ததற்காக கார்த்திக் ஆர்யனுக்கு சிறந்த நடிகர் விருது வழங்கப்பட்டது.

சிறந்த தேசிய நடிகைக்கான விருதை ஆர்ட்டிக்கிள் 370 படத்துக்காக யாமி கவுதம் பெற்றுக் கொண்டார். மேலும், கேப்டன் மில்லர் படத்தில் நடித்தற்காக சிறந்த நடிகர் (சிறப்புப் பிரிவு) விருது தனுஷுக்கு வழங்கப்பட்டது.

அமரன் படத்தை இயக்கிய ராஜ்குமார் பெரியசாமிக்கு சிறந்த இயக்குநருக்கான விருதும், ஒட்டுமொத்த பொழுது போக்கு படமாகத் தேர்வான கல்கி 2898 ஏடி படத்துக்காக அந்தப் படத்தின் தயாரிப்பாளருக்கும் விருது வழங்கப்பட்டது.

சிறந்த துணை நடிகருக்கான விருது சஞ்சஸ் மிர்ஸாவுக்கும் (படம்: பக்சக்), துணை நடிகைகளுக்கான விருது ரூபஸ்ரீ வர்கடிக்கும் (மித்யா), சச்சனா நமிதாஸுக்கும் (தமிழ் திரைப்படம் மகாராஜா ) வழங்கப்பட்டது.

சிறந்த அறிமுக இயக்குநர் விருது ரந்தீப் ஹூடாவுக்கு (ஸ்வதந்தர வீர சாவர்க்கர்) வழங்கப்பட்டது. தேசிய, சமூக மதிப்புகளை உயர்த்திய படமாகத் தேர்வு செய்யப்பட்ட கேப்டன் மில்லர் படத்துக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. சிறந்த இசை அமைப்பாளராக தேர்வு செய்யப்பட்ட சஷ்வத் சச்சேவுக்கு (ஆர்ட்டிகிள் 370, கல்கி 2898 ஏடி படங்கள்) விருது வழங்கப்பட்டது.

சிறந்த திரைப்படமாக தேர்வு செய்யப்பட்ட ஆர்ட்டிகிள் 370 படத்துக்கான விருதை இயக்குநர் ஆதித்யா தார் பெற்றுக்கொண்டார். சிறந்த திரைக் கதைக்கான விருதுகளை சுகுமார் (புஷ்பா 2), யோகேஷ் தேஷ் பாண்டே (ஸ்வர்கந்தர்வ சுதர் பாட்கே) ஆகியோருக்கும், சிறந்த வசனத்துக்கு வெங்கி அட்லூரிக்கும் (லக்கி பாஸ்கர்), சிறந்த ஒளிப்பதிவாளருக்கு ஷெனாத் ஜலாலுக்கும் (பிரம்மயுகம்), சிறந்த புரொக்சன் டிசைனுக்கான விருதை நிதின் ஜிஹானி சவுத்ரி (கல்கி 2898 ஏடி) உள்ளிட்டோருக்கு விருதுகளை குடியரசுத் தலைவர் முர்மு வழங்கி கவுரவித்தார்.

சென்னையில்... தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாக்கள் வழக்கமாகவே டெல்லியில்தான் நடைபெறும். 1954ம் ஆண்டு முதல் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், 1971ம் ஆண்டு மட்டும் 17வது தேசிய திரைப்பட விருது விழா தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நடத்தப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. அதன் பிறகு முதன்முறையாக டெல்லியை விட்டு குஜராத்தின் ஏக்தா நகரில் தேசியத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

மம்மூட்டிக்கு 4வது தேசிய விருது: மலையாள நடிகர் மம்மூட்டி 4வது முறையாக சிறந்த நடிகருக்கான தேசிய விருதை பெற்றுள்ளார். இதற்கு முன்பு அவர் ஒரு வடக்கன் வீர கதா, மதிலுகள் படங்களுக்காக முதல் முறையும் (1990), விதேயன், பொந்தன் மாடா (1994) படங்களுக்காக 2வது முறையும், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் (1999) படத்துக்காக 3வது முறையும் சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றிருந்தார். தற்போது 4வது தேசிய விருதை பிரம்மயுகம் படத்துக்காக பெற்றுள்ளார்.

## ‘சமூகத்தின் நலனுக்கே மாணவர்கள் எப்போதும் முன்னுரிமை அளிக்க வேண்டும்’

### ஜனாதிபதி திரவுபதி முர்மு...



காந்திநகர், செப்.24–

குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள மகாராஜா சாயாஜிராவ் பரோடா பல்கலைக்கழகத்தின் 75வது பட்டமளிப்பு விழாவில், ஜனாதிபதி திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக பங்கேற்பு, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார். இந்த விழாவில் மாணவர்களிடம் உரையாற்றியபோது அவர் கூறியதாவது;.“மாணவர்களாகிய நீங்கள் கல்வியை உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மட்டுமே பயன்படுத்திக் கொள்வதைத் தாண்டி, பரந்த அளவில் உங்களால் பொதுநலனுக்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.உங்கள் பணியின்போது தேசம் மற்றும் சமூகத்தின் நலன்களுக்கே எப்போதும் முன்னுரிமை அளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நாடு மற்றும் சமூகத்தின் வளர்ச்சியோடு நீங்களும் முன்னேறுவீர்கள். அத்தகைய முன்னேற்றம் உங்களுக்கு அளவற்ற மனநிறைவை அளிப்பதோடு, கல்வியின் அர்த்தத்தை உங்களால் உணர முடியும். .நீங்கள் ஒரு பொறியாளராக மாறினால், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் தொழில் நுட்பங்களை உருவாக்குங்கள். நீங்கள் ஒரு மருத்துவராக மாறினால், மருத்துவத்தை வெறும் தொழிலாக மட்டும் கருதாமல், ஒரு சேவையாக கருதுங்கள்.”சேவையில்தான் மனிதாபிமானமும் அமைதியும் அடங்கியுள்ளன. அது மனநிறைவையும் தருகிறது. வாழ்வதற்கு வளங்கள் தேவை என்றாலும், பணம் மட்டுமே எல்லாம் என்று ஆகிவிடாது. பிறருக்கு சேவை செய்வதில்தான் உண்மையான மனநிறைவு கிடைக்கிறது. .அறிவியலாளர்கள் மனிதகுல நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பணியாற்ற வேண்டும். அதேவேளையில், கலைஞர்களும், எழுத்தாளர்களும் தங்கள் கலை மற்றும் படைப்புகள் மூலம் சமூகத்தின் உணர்வுப்பூர்வமான பண்பை வளப்படுத்த வேண்டும்.”இவ்வாறு அவர் தெரிவித்தார். “

## மது பாட்டில்களுக்கு சுற்றுச்சூழல், சமூக நல வரி: மதுபானங்களின் விலை உயர வாய்ப்பு

சென்னை: செப்.24–

தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் மது பாட்டில்களுக்கு கூடுதலாக சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி விதித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது மதுபான உற்பத்தியாளர்கள் தற்போது கலால் வரி மற்றும் மதிப்புக்கூட்டு வரியை தமிழக அரசுக்கு செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மது பாட்டில்களுக்கு கூடுதலாக சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரியும் விதிக்கப்படவுள்ளது. தமிழ்நாடு மதிப்பு கூட்டப்பட்ட வரி சட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு மது பாட்டிலுக்கும் அதன் அளவு மற்றும் பாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு ஏற்ப வரி விதக்கவும், அதிகபட்சமாக ரூ.20 வரை விதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி வருவாயை மதுபாட்டில்களை மறுசுழற்சி செய்ய அல்லது பாதுகாப்பாக அகற்றும் பணிகளுக்கும் மது பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும், மதுவின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சுற்றுச்சூழல், வனம் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அரசு பயன்படுத்தும்.

மேலும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன் சார்ந்த பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றது முதல் மதுபான உற்பத்தியாளர்கள் டாஸ்மாக் கடைகளுக்கு வழங்கும் ஒவ்வொரு மதுபான பெட்டிக்கும் கூடுதலாக ரூ.90 கட்டணம் பெறப்படுகிறது. மேலும் மூலப்பொருட்களின் விலை மற்றும் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் மதுபானங்களின் விலை உயர்த்த வேண்டும் என உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

டாஸ்மாக் நிர்வாகமும் இதுகுறித்து ஆலோசனைகளை மேற்கொண்டிருந்த நிலையில், தற்போது கூடுதலாக ரூ.20 வரை சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி விதிக்கப்பட்டுள்ளதால் மதுபானங்கள் விலை உயர வாய்ப்புள்ளது.

## தாராபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரி பார்க்கும் பணி

### கலெக்டருக்காக, காத்திருந்த அரசியல் கட்சியினர்





திருப்பூர், செப். 24:

தாராபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரி பார்க்கும் பணி நேற்று நடைபெற்றது. இதில் கலெக்டரின் வருகைக்காக அரசியல் கட்சியினர் காத்திருந்ததால் அதிருப்தி அடைந்தனர்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரம் முதல் நிலை சரிபார்ப்பு பணி நேற்று காலை நடைபெற்றது. இதற்கு கலெக்டர் மனிஷ் தலைமை தாங்கினார்.

இடைதேர்தலில் வருகிற 6ம் தேதி வாக்குபதிவு நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கு 22 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் இரண்டு வாக்குப்பதிவு இயந்தரங்கள் பயன்படுத்தப்பட உள்ளது. ஏற்கனவே 384 (320+64) வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கூடுதலாக தேவைப்படும் | 384 (320+64) வாக்குப்பதிவு எந்திரங்களில் (Ballot Unit) 233 வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணி முடிவுற்று தயார் நிலையில் உள்ளது.

மீதம் தேவைப்படும் 151 வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணி நடைபெற்றது.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கும் பணி காலை 10 மணிக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசியல் கட்சியினர் பலரும் காலை 10 மணிக்கு வந்திருந்தனர். ஆனால் 10.30 மணி வரை கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் வராததால் அரசியல் கட்சியினர் பலரும் காத்திருந்தனர்.

இதுபோல் வழக்கமான இயந்திரங்கள் சரி பார்க்கும் பணியின் போது ஏராளமான அரசியல் கட்சியினர் வருவது வழக்கம். ஆனால் நேற்று ஒரு சில கட்சிகளை சேர்ந்தவர்கள் மட்டுமே வந்திருந்தனர். இதனால் இயந்திரங்கள் வைக்கப்பட்டிருந்த அறையை திறந்து உள்ளே சென்ற கலெக்டர் மனிஷ் பார்வையிட்டு விட்டு உடனே புறப்பட்டு சென்று விட்டார். அரசியல் கட்சியினருடன் எந்த ஆலோசனையும் மேற்கொள்ளவில்லை. இதனால் அரசியல் கட்சியினர் அதிருப்தி அடைந்தனர். தங்களை எதற்காக அழைத்தார்கள் என்றபடி கூறிவிட்டு புறப்பட்டு சென்றனர்.

இதில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) கண்ணன், தனி தாசில்தார் (தேர்தல்) தேவராஜ் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

## “தமிழகத்துக்கு உடனடியாக 600 துணை மின் நிலையங்கள் தேவை : அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை: செப்.24–

“நாடு முழுவதும் மின் பற்றாக்குறை இருக்கிறது. திமுக ஆட்சியில் மின் மாற்றிகள் முறையாகப் பராமரிக்கப் படவில்லை. 6 ஆயிரம் மின்மாற்றிகளை சீரமைக்க வேண்டி இருக்கிறது. தமிழகத்துக்கு உடனடியாக 600 துணை மின் நிலையங்கள் தேவை” என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மின்வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் விஜய் ஆய்வு செய்த பிறகு, அமைச்சர் நிர்மல் குமார் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், “இந்தியா முழுவதுமே மின்சாரப் பற்றாக்குறை இருக்கத்தான் செய்கிறது. நமக்கு துணை மின் நிலையங்கள் பற்றாக்குறையும் இருக்கிறது. நிறைய இடங்களில் கூடுதல் அழுத்தம் தாங்க முடியாமல் மின்மாற்றிகள் தீப்பற்றி எரிகின்றன. வரும் காலங்களில் இவை சரி செய்யப்படும். மின் தேவைகளை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திமுக ஆட்சியில் மின்மாற்றிகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. 6 ஆயிரம் மின்மாற்றிகளை சீரமைக்க வேண்டி இருக்கிறது. தமிழகத்துக்கு உடனடியாக 600 துணை மின் நிலையங்கள் தேவைப்படுகிறது.

மின்வாரியத்துக்கு 10,000 பணியாளர்கள் நியமிக்கப்படுவர். சீரமைப்பு பணிகளை துரிதமாக செய்கிறோம். வரவிருக்கும், கோடை மின் தேவையை சமாளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. காற்றாலை மின் உற்பத்தி குறைவுவாக உள்ளது. மின்பாதிப்புகளை சரிசெய்ய அதிகாரிகளுக்கு, மக்களும் அவகாசம் தர வேண்டும்” என்று அவர் தெரிவித்தார்.

# கோவையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை அமைச்சர் சம்பத்குமார்துவக்கி வைத்தார்



கோவை செப்:24

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை திருவான்மியூர் காந்திகிராமம் நடுநிலைப் பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

தொடக்க விழாவினை தொடர்ந்து கோவை மாவட்டம் மாநகராட்சி ரத்தினபுரி மேல்நிலைப் பள்ளியில் (online) வாயிலாக நடைபெறும் நிகழ்ச்சியில் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார்,

கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் மற்றும் கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா,மத்திய மண்டல தலைவர் மீனா லோகு (திமுக) மற்றும் அதிமுக கவுன்சிலர் பிரபாகரன், காங்கிரஸ் கவுன்சிலர் காயத்ரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அமைச்சர் உடன் சேர்ந்து குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

# இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்!!!






திருப்பூர், செப்டம்பர்24

இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவங்களை விவசாயிகள் கொடுத்து. பொதுமக்களிடம் சென்று சேரக்கூடிய விவசாய விலைப் பொருட்கள் இயற்கை விவசாயப் பொருட்கள் (Organic Agricultu ral Products) என்பது ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமல், இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் உரம், விதைகள் மற்றும் விளைபொருட்களைக் குறிக்கும். இயற்கை விவசாய இடுபொருட்கள் (Inputs for Organic Farming)

இயற்கை உரம்: மாட்டுச் சாணம், மண்புழு உரம் (Vermico mpost), மற்றும் பண்ணைக் கழிவுகள். வளமூட்டிகள்: ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா மற்றும் மீன் அமிலம். பூச்சிக் கொல்லிகள்: வேப்பெண்ணெய், தசகப்பருத்தி கரைசல் மற்றும் இலை, பூண்டு கரைசல். பாரம்பரிய விதைகள்: வீரிய ஒட்டு விதைகள் இல்லாமல், பாரம்பரிய நெல் மற்றும் தானிய விதைகள். இயற்கை விளை பொருட்கள் (Organic Yields)பாரம்பரிய அரிசி வகைகள் (கருப்பு கவுனி, மாப்பிள்ளை சம்பா போன்றவை).ரசாயனம் கலக்காத தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் செக்கில் ஆட்டிய நல் லெண்ணெய், கடலை எண்ணெய்.

இயற்கையான முறையில் விளைவிக்கப் பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள். இயற்கை விவசாயத்தில் தற்சார்பு வாழ்க்கை மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பு முறை பற்றிய விவசாயப் பொருட்களை வாங்குவது

காய்கறிகள். அனைத்தும் இயற்கையாக விளையக்கூடிய பொருட்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும். அனைத்திந்திய விவசாய சங்கம், தொழிலாளர் சங்கம்,

தலைவர் விவசாய மணி (எ) சுப்பிரமணி திருப்பூர் மாவட்டம் ஜெய் ஸ்ரீ ராம் கல்லூரி மாணவரிடம் கருத்துக்களை கூறினார்.

இந்த நிகழ்ச்சியானது மாவட்ட முழுவதும் தமிழக முழுவதும் நமது இந்திய நாடு முழுவதும் பொது மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்று இன்று கல்லூரி மாணவரிடம் பேட்டி அளித்தார்...

# அரசு கல்லூரியில் வளர்ச்சி அடைந்த இந்தியா வினாடி வினா போட்டி



புதுக்கோட்டை, செப்.24–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில், 'வளர்ச்சி அடைந்த இந்தியா' (விக்சித் பாரத்) திட்டத்தின்கீழ் இணைய வழி வினாடி வினா போட்டி, கல்லூரித் திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ரா.சரளா தலைமை தாங்கித் தொடங்கி வைத்து, நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் குறித்தும், வளர்ச்சி அடைந்த இந்தியா வினாடி வினா போட்டி குறித்தும் மாணவ, மாணவியரிடையே எடுத்துரைத்தார்.

இப்போட்டியில், தமிழ், கணினி அறிவியல், கணிதவியல் மற்றும் இயற்பியல் துறை சார்ந்த முதலாம் ஆண்டு மாணவ, மாணவியர் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்று, எனது பாரதம் பதிவேற்றத்தை நிறைவு செய்து, வினாடி வினா போட்டியிலும் பங்கேற்று பயனடைந்தனர்.

போட்டி ஏற்பாடுகளைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் ச ரமேஷ், மு. பழனித்துரை, வேதியியல் துறைத்தலைவர் து சிற்றரசு மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வல மாணவ, மாணவியர் பலரும் செய்திருந்தனர்.

# இந்திய அஞ்சலக வங்கி கணக்குகள் துவங்க சிறப்பு முகாம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் வங்கி கணக்குகள் மூலம் ஆகஸ்ட் மாதம் பணம் பட்டுவாடா செய்யப்படாத மாதாந்திர முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களுக்கு இந்திய அஞ்சலக வங்கி கணக்குகள் துவங்க சிறப்பு முகாம் வருகிற 24.09.2026 (வியாழன்) மற்றும் 25.09.2026 (வெள்ளி) ஆகிய இரு நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மாதாந்திர உதவித்தொகை கிடைக்கப் பெறாத பொதுமக்கள் ஆதார் எண், பான்கார்டு, அலைபேசி (பான்கார்டு இல்லையெனில் வாக்காளர் அடையாள அட்டை / பிறப்புச்சான்று / கல்விச்சான்று ஏதேனும் ஒரு ஆவணம்) ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி ஒப்பந்ததாரருக்கு ரூ.1 கோடி அபராதம் விதித்து நுகர்வோர் நீதிமன்றம் தீர்ப்பு!

கிருஷ்ணகிரி: செப்.24–

கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி சாலை பராமரிப்பு குறைபாடு தொடர்பான புகாரில் ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூ.1 கோடி அபராதம் விதித்து நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.சாலையை முறையாக பராமரிக்காமல் சுங்கக்கட்டணம் வசூலித்த வழக்கில் நுகர்வோர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சுரேஷ்பாபு என்பவர் சுங்கச்சாவடி எல்லைக்குட்பட்ட சாலைகள் மோசமாக இருப்பதால் மனஉளைச்சல் ஏற்படுவதாகவும் இதுதொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களையும் மேற்கோள்காட்டி, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், பராமரிப்பு ஒப்பந்த நிறுவனதிற்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். இதையடுத்து, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத் தலைவர் ராஜா தலைமையிலான அமர்வு விசாரணை நடத்தியது. பின்னர் பிறப்பித்த உத்தரவில் பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு ரூ.1 லட்சம் இழப்பீடும், வழக்கு செலவுக்கு ரூ. 15,000 வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், 5 ஆண்டுகளில் சுங்கச்சாவடியில் ரூ.919.91 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டபோதிலும், சாலையை பராமரிக்கவில்லை. எனவே வாகன ஓட்டிகள் சந்திக்கும் மனஉளைச்சலைக் கருத்தில் கொண்டு, பராமரிப்பு ஒப்பந்த நிறுவனத்துக்கு ரூ.1 கோடி அபராதம் விதித்த ஆணையம், அந்தத் தொகையை தமிழ்நாடு மாநில நுகர்வோர் ஆணையத்தின் சட்ட உதவி நிதியத்துக்குச் செலுத்த உத்தரவிட்டுள்ளது.

# தமிழகத்தில் அதிகரிக்கும் டெங்கு ஒரே நாளில் 301 பேருக்கு பாதிப்பு உறுதி..!

சென்னை: தமிழகத்தில் சுமார் 301 பேருக்கு டெங்கு பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டு உள்ளதாக மாநில சுகாதாரத்துறை தகவல் தெரிவித்து உள்ளது.உலக வரைபடங்களை ஆராய்

இது தொடர்பாக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் (செப்டம்பர் 22) ஒரே நாளில் 301 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழகத்தில் இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 17,649ஆக உயர்ந்துள்ளது, இதுவரை தமிழகத்தில் 9 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். என கூறப்பட்டுள்ளது.

தற்போது மாநிலத்தின் பல இடங்களில் மழை பெய்து வருவதால் டெங்கு பாதிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் அனைவரும் கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் அறிக்கையில் தமிழக சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. சமீப நாட்களாக தொடர்ந்து அதிகரித்து வரும் டெங்கு பாதிப்பை கருத்தில் கொண்டு பொதுமக்கள் கொசு உற்பத்தியாகும் இடங்களை அகற்றி சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஒருங்கிணைந்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் ஒசூர் மாநகராட்சி ஆணையர் முகமது ஷபீர் ஆலம் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் உமாமகேஸ்வரி, மாவட்ட சுகாதார அலுவலர் ஜெகநாதன், உதவி இயக்குனர்கள் வடிவேல், தமிழ் செல்வன் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கவுண்டம்பாளையம் தொகுதி பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்த கனிமொழி சந்தோஷ் எம் எல் ஏ



கோவை,செப்:24

தமிழக முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, கவுண் டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட நரசிம்ம நாயக்கன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் அசோகபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கத்தை கனிமொழி சந்தோஷ்,எம் எல் ஏ தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம் பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு சத்தான மற்றும் தரமான காலை உணவு வழங்கப்படுவதுடன், காலையில் உணவு உட்கொள்ளாமல் பள்ளிக்கு வரும் மாணவர்களின் பசியைப் போக்கி, அவர்கள் வகுப்பறையில் கவனத்துடன் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்படுகிறது.

கல்வியுடன் ஊட்டச்சத்தையும் இணைத்து,மாணவர்களின் உடல் மற்றும் மனநலனை கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம், அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் வலுவான அடித்தளமாக அமையும்.

குறிப்பாக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இத்திட்டம் பெரும் பயனளிப்பதுடன், "பள்ளி க்குச் செல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியுடன் ஊட்டச் சத்து" என்ற சமூகப் பொறுப்பையும் வலுப்படுத்துகிறது. காலை உணவுத் திட்டத்தின் தொடக்க நிகழ்வின்போது, பள்ளிகளில் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர், சுகாதாரம்,வகுப்பறை உள்ளிட்ட தேவைகள் குறித்தும் கனிமொழி சந்தோஷ் எம் எல் ஏ கேட்டறிந்தார்.

மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்த தேவையான அடிப்படை வசதிகளை படிப்படியாக செய்து தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

கல்வி,ஊட்டச்சத்து மற்றும் மாணவர் நலன் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கும் இத்திட்டம்,மேலும் பல அரசு பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படுவது மாணவர்களின் எதிர் காலத்தை வளப்படுத்தும் முக்கியமான முன்னெடுப்பாக அமையும் என்று தெரிவித்தார்.

# சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் வரும் 29ஆம் தேதி நேரில் ஆஜராக உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை: செப்.24–

சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் வரும் 29ஆம் தேதி நேரில் ஆஜராக உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா வரும் 30ஆம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கவும் உத்தரவிட்டுள்ளது. சொத்துவரி தொடர்பான வழக்குகளில் பல முறை அவகாசம் அளித்தும் மாநகராட்சிகள் தரப்பில் பதிலளிகாததால் மாநகராட்சி ஆணையர்கள் ஆஜராக உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

# கிருஷ்ணகிரி குப்பம் சாலை சாலையில் மருத்துவக்கழிவு மற்றும் இறைச்சி கழிவுகளை கொட்டி மலைப்போல தேங்கி உள்ளதால் டெங்கு உள்ளிட்ட தொற்று நோய் பரவும் அபாயம்

## உடனே நடவடிக்கை எடுக்க கோரி பாரதிய ஜனதா கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த் பூபால் கோரிக்கை



கிருஷ்ணகிரி செப்.24–

கிருஷ்ணகிரி குப்பம் சாலை சாலையில் மருத்துவக்கழிவு மற்றும் இறைச்சி கழிவுகளை கொட்டி மலைப்போல தேங்கி உள்ளதால் டெங்கு உள்ளிட்ட தொற்று நோய் பரவும் அபாயம் உடனடியாக மலைபோல் தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த் பூபால் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிருஷ்ணகிரி நகராட்சிக்கு உட்பட்ட 32 வார்டுகளில் நாள்தோறும் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகள் மருத்துவமனைகளில் இருந்து எடுத்து வரப்படும் மருத்துவ கழிவுகள் மற்றும் இறைச்சி கழிவுகளை டிராக்டர்கள் மூலமாக எடுத்து வரப்படும் குப்பைக் கழிவுகளை கிருஷ்ணகிரி குப்பம் சாலையில் கொட்டப்பட்டு வருகிறது.

கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் குப்பைகளை கொட்டி வருவதால் குப்பைகள் மலைபோல தேங்கி உள்ளது.

மேலும் கிருஷ்ணகிரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து எடுத்து வரப்படும் இறச்சி கழிவுகள் மருத்துவ கழிவுகளை மூட்டை, முட்டை யாககட்டி சாலை ஓரங்களில் கொட்டி விட்டு செல்தல் பெரும் தூர் நாற்றம் வீசுகிறது,

இதன்காரணமாக பெரும் தூர் நாற்றம் வீசுவதால் அந்த வழியாக வாகனங்களில் செல்பவர்களும், சாலை மார்க்கமாக நடந்து செல்பவர்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்,

மேலும் தொற்றுநோய் மற்றும் டெங்கு காய்ச்சலும், ஏற்படும் அபாயமும் ஏற்பட்டு இருப்பதால் அப்பகுதிகளில் குடியிருந்து வரும மக்களுடையே பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது

இது குறித்து பேசிய பாரதிய ஜனதா கட்சியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த் பூபால் கிருஷ்னகிரி பகுதிகளில் இருந்து எடுத்து வரப்படும் மருத்துவ கழிவுகள் இறச்சிக் கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகளை சாலையோம் கொட்டி விட்டு செல்வதினால் சாலையில் செல்ல முடியாத அளவுக்கு தூர் நாற்றம் , ஏற்பட்டு உள்ளது

பல ஆண்டுகளாக ஆரேஇடத்தில் குப்பைகளை கொண்டப்பட்டு வருவதால் நிலத்தடி தண்ணீரும் மாசுபட்டு விவசாயமும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது தற்போது டெங்கு உள்ளிட்ட தொற்று நோய்களும் வேகமாக பரவி வருகிறது ஆகையால் மலைப்போல் தேங்கி உள்ள இந்த குப்பையை அகற்ற நாவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையில் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

# தமிழகத்தில் டெங்கு 16,577ஐ தாண்டியும் புதுச்சேரி அரசு மௌனம் காப்பது ஏன்? செயலிழந்து விட்டதா புதுச்சேரி சுகாதாரத்துறை மற்றும் நகராட்சித்துறை?

## தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

புதுச்சேரி. செப்.24–

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்து உள்ள தகவல் உண்மை என்னும் பொழுது, புதுச்சேரி மாநிலத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் பற்றிய தகவலை புதுச்சேரி அரசு வெளியிடாதது ஏன் என்ற கேள்வி அவசியமாக தோன்றுகிறது.

தமிழக பொது சுகாதாரத் துறையின் அதிகாரப்பூர்வ தகவலின்படி, செப்டம்பர் 17ம் தேதி வரை தமிழகத்தில் மட்டும் 16,577 பேர் டெங்குவால் பாதிக்கப்பட் டுள்ளனர். ஒரே நாளில் 244 பேருக்கு புதிதாக பாதிப்பு உறுதி செய்யப்பட் டுள்ளது. 9 பேர் உயிரிழந் துள்ளனர். தினமும் சராசரியாக 200 பேர் பாதிக்கப்படுகின்றனர்.

சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட புதுச்சேரியை ஒட்டிய 10 மாவட்டங்களில் தான் பாதிப்பு அதிகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சூழலில் புதுச்சேரியில் நிலவரம் என்ன என்பதை அரசு மறைப்பது ஏன்?



இது நாள் வரை புதுச்சேரி மாநிலத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தகவலை அரசு வெளியிடாதது ஏன்? மொத்த பாதிப்பு எவ்வளவு, உயிரிழப்பு எவ்வளவு, எந்தெந்த பகுதிகளில் பாதிப்பு அதிகம் என்ற வெள்ளை அறிக்கையை வெளியிட தயங்குவது ஏன்?

அது மட்டும் இன்றி புதுச்சேரியில் பரவலாக பள்ளி மாணவர்களுக்கு காய்ச்சல் மற்றும் தட்டம்மை பரவுவதாகவும் செய்திகள் வருகின்றன. இதன் உண்மைத் தன்மையை சுகாதாரத்துறை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதை மறந்து மௌனம் காப்பது ஏன்?

மழைக்காலம் தொடங்கிய பிறகும் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ முகாம்கள், பள்ளிகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் எதுவும் முறையாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சுகாதாரத்துறை செயலிழந்து இருக்கிறதா?

டெங்கு பரவலுக்கு மூல காரணமான கொசு உற்பத்தியை தடுக்க வேண்டிய நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து துறையும் முற்றிலும் செயலிழந்து விட்டது. புதுச்சேரி முழுவதும் குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கிக் கிடப்பதும், கால் வாய்கள் தூர்வாரப்படாமல் கழிவுநீர் தேங்கி நிற்பதும், குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் வடியாமல் தேங்கி நிற்பதும் கொசு உற்பத்திக்கு காரணமாக அமைந்துள்ளது. தமிழகத்தில் 25,000க்கும் மேற்பட்ட கொசு ஒழிப்பு பணியாளர்கள் களத்தில் உள்ள நிலையில், புதுச்சேரி நகராட்சியில் கொசு மருந்து அடிக்கும் பணிகள் கூட முறையாக நடைபெறவில்லை.

எனவே, வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகவும், பெற்றோர்களின் அச்சத்தை போக்கும் விதமாகவும் புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குனர் அவர்கள் உடனடியாக செய்தியாளர்களை சந்தித்து, புதுச்சேரியில் டெங்கு மற்றும் காய்ச்சல் பாதிப்பின் உண்மை நிலவரத்தை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும். சுகாதாரத்துறை மட்டுமின்றி, நகராட்சி நிர்வாகமும் இணைந்து உடனடியாக போர்க்கால அடிப்படையில் கொசு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என தேசிய மக்கள் முன்னணி சார்பில் வலியுறுத்துகிறோம்.

தவறும் பட்சத்தில், மாணவர்களின் உயிர் காக்கும் போராட்டத்தை தேசிய மக்கள் முன்னணி மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்கள் கூட்டமைப்பு முன்னெடுக்கும் என எச்சரிக்கிறோம்.



தமிழ்நாடு முதல்வர், சென்னை திருவான்மியூரில் உள்ள காந்திகிராமம், சென்னை நடுநிலைப்பள்ளியில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் பெருந்லைவர் காமராஜர் காலை உணவுத்திட்ட விரிவாககத்தை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம்வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் முன்னிலையில் தொடங்கி வைத்து பள்ளி மாணவிகளுக்கு உணவினைப் பரிமாறினார்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கை அசைவுகள் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தி காது கேளாதோர் உரிமை நலச் சங்கம் மனு அளிப்பு!




ஈரோடு. செப். 24

உலக காது கேளாதோர் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு காது கேளாதோர் உரிமை நலச் சங்கத்தின் ஈரோடு மாவட்டக் குழு சார்பில், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தங்களது கை அசைவுகள் மூலம் உணர்வுகளை வெளிப் படுத்தி கவனத்தை ஈர்க்கும் வகையில் கோரிக் கைகளை முன்வைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

அதில், இந்திய சைகை மொழியை உடனடியாக அமல்படுத்த வேண்டும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், மருத்துவ மனைகள் மற்றும் நீதிமன்றங்களில் காது கேளாதோரின் பயன்பாட்டிற்காக சைகைமொழி பெயர்ப்பாளர் களை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். மேலும், காது கேளாத மாற்றுத்தி றனாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை உயர்த்தி மாதம் ரூ.6,000/ ஆக வழங்கிட வேண்டும் எனவும், அரசு வேலை வாய்ப்புகளில் காது கேளாதோருக்கு சட்டப்படி உரிய 1% சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், காது கேளாதோர் மாற்றுத் திறனாளிகளின் குடும்ப அட்டைகளை முன்னுரிமை அடிப் படையில் அந்தியோதயா அன்ன யோஜனா (AYY) அல்லது முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) என மாற்றம் செய்து வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட 6 அம்ச முக்கிய கோரிக்கை களை வலியுறுத்தி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

# உடலுறுப்புக் கொடையாளர்கள் அனைவரையும் இந்நாளில் பெருமையுடன் நினைவுகூர்வோம்: முதலமைச்சர் விஜய்

சென்னை: உடலுறுப்பு தான நாளில் கொடையாளர்களைப் பெருமையுடன் நினைவுகூர்வோம் என்று முதலமைச்சர் விஜய் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட பதிவில், உடலுறுப்பு தானம் குறித்த முக்கியத்துவத்தை மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும், சிறுவன் ஹிதேந்திரனின் உடலுறுப்புகளை தானமாக வழங்கியதை நினைவுகூரும் வகையிலும் ஆண்டுதோறும் செப்டம்பர் 23ஆம் நாள் தமிழ்நாடு உடலுறுப்பு தான நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. உடலுறுப்பு தானம் என்பது, ஒருவர் மறைந்த பின்னரும் அவரது உறுப்புகள் மூலம் பலருக்கு மறுவாழ்வு அளிக்கும் மகத்தான மனிதநேயச் செயலாகும். உறுப்பு மாற்று சிகிச்சைக்காகக் காத்திருக்கும் பலருக்குத் தானமாக வழங்கப்படும் ஒவ்வொரு உறுப்பும் புதிய நம்பிக்கையையும், புதிய வாழ்வையும் அளிக்கிறது. மனிதநேயச் சுடரை ஏந்தி, உயிர்களின் மறுவாழ்வுக்கு வழிகாட்டும் உடலுறுப்புக் கொடையாளர்கள் அனைவரையும் இந்நாளில் பெருமையுடன் நினைவுகூர்வோம்! என்று அவர் கூறியுள்ளார்.

## ஈரோடு புகைப்பட கண்காட்சி..



ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், பாண்டியன் பாளையம் ஊராட்சியில், ஈரோடு செய்தித் துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள, தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை குறித்த விளம்பர கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்து சென்றனர்.

# புங்கத்தூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அரிசி குடோனில் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வண்டுகளை முற்றிலும் அழிக்க உடனடி நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை :

திருவள்ளூர் செப் 24

திருவள்ளூர் நகராட்சி 12வது வார்டுக்கு உட்பட்ட பகுதியான பத்தியால் பேட்டை, கண்ணதாசன் நகர், மகாவீர் அவென்யூ, ஜெய் நகர், ஜெயா நகர், ஆகிய பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களாக அருகில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அரிசி குடோனில் இருந்து வரும் சிறு வண்டுகளால் இப்பகுதியில் வாழும் பொது மக்களுக்கு அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

வீடுகள் முழுவதும் வண்டுகள் நிறைந்து இரவு நேரங்களில் பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் காதுகளில் வண்டுகள் நுழைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.அதுமட்டுமல்லாமல் துர்நாற்றம், உடல் அரிப்பு. போன்ற உடல் உபாதைகளும் ஏற்படுகின்றது.மேலும் உண்ணும் உணவுகளில் வண்டுகள் நிரம்பி வழிகின்றது. இந்த அரிசி குடோனை சுற்றி சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த வண்டுகளால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இது சம்பந்தமாக நேரிலும், தொலைபேசி மூலமாகவும் இப்பகுதி பொதுமக்கள் புகார்கள் அளித்தும் இதுவரை குடோன் நிர்வாகத்தினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இதையடுத்து திருவள்ளூர் நகர் மன்ற உறுப்பினர் ராஜ்குமார் என்கிற தாமஸ் மற்றும் அப்பகுதி மக்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தர ஆய்வாளர் ஆர்.மாதவனிடம் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வண்டுகளை முற்றிலும் அழிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து இருப்பதால் தற்போது செல்வதாகவும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் பொதுமக்களை திரட்டி மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் அப்பகுதி மக்கள் எச்சரித்தனர்.




ஈரோடு மாவட்டம் பவானி ஸ்ரீபாலாஜி பத்மாவதி மஹாலில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப்பணியார்ளகளுக்கான சிறப்பு முகாம மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் தாட்கோ மாவட்ட மேலாளர் முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.

# மனதை ஒருமுகப்படுத்துங்கள்: பிரம்மா குமாரி உமா வலியுறுத்தல்

வந்தவாசி, செப் 24:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ரோட்டரி சங்கம், வணிகர்கள் சங்க பேரமைப்பு மற்றும் பிரம்மா குமாரிகள் அமைப்பு இணைந்து நடத்திய ரக்ஷ பந்தன் விழா ஆரணி ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 'மகிழ்ச்சிக்கான பாஸ்வேர்டு' என்ற தலைப்பில் திருவண்ணா மலை மாவட்ட பிரம்மா குமாரிகள் அமைப்பின் இயக்குனர்,ஊக்கமளிக்கும் பேச்சாளர் இராஜயோகினி டாக்டர் பி.கே.உமா பங்கேற்று சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். மேலும் மனதை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், எண்ணங்களின் வலிமையை உணருங்கள் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரக்ஷ பந்தன் கயிறு கட்டி இனிப்புகள் வழங்கப் பட்டது.இந்த நிகழ்வில் 300 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



# சேலம் சூட்கேஸ் கொலை வழக்கு 5 ஆண்டுகளுக்கு பிறகு வங்கதேச பெண் புனேவில் கைது.

சேலம். செப்.24–

சேலம் மாநகரில் பியூட்டி பார்லர் உரிமையாளரான வங்கதேசத்தை சேர்ந்த பெண் கொடூரமாக கொலை செய்யப்பட்டு, அவரது உடல் சூட்கேஸில் அடைக்கப்பட்ட சம்பவம் கடந்த 2021ஆம் ஆண்டு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த கொடூரக் கொலை நடந்து 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், தலைமறைவாக இருந்த முக்கிய பெண் குற்றவாளி தற்போது காவல்துறையினரால் அதிரடியாகக் கைது செய்யப் பட்டுள்ளார். சட்டவிரோத பாலியல் தொழில், சம்பள பாக்கி மற்றும் முக்கோணக் காதல் தகராறு காரணமாக இக்கொலை அரங்கேறியுள்ளது விசாரணையில் தெரியவந் துள்ளது.





**சேலத்தில் ரகசிய தொழில் மற்றும் கொடூரக் கொலை:**

வங்கதேசத்தை சேர்ந்த 26 வயதான தேஜ்மண்டல் என்பவரும், சேலம் ஆத்தூரைச் சேர்ந்த பிரதாப் என்பவரும் சென்னையில் பியூட்டி பார்லரில் வேலை செய்தபோது பழக்கமானவர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து சேலத்தின் பள்ளபட்டி மற்றும் சங்கர் நகர் பகுதிகளில் மசாஜ் சென்டர்களை நடத்தி வந்தனர். அத்துடன், குமாரசாமிப்பட்டியில் வாடகைக்கு வீடு எடுத்து கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர். ஆனால், வெளிப்பார்வைக்கு மசாஜ் சென்டர் என்று கூறிக்கொண்டு, வங்கதேசத்தில் இருந்து பெண்களை வரவழைத்து சட்டவிரோதமாக பாலியல் தொழில் நடத்தி வந்துள்ளனர். அங்கு வேலை பார்த்த நிஷி, ஷீலா, ஓஷி ஆகிய பெண்களுக்கும், லுப்லு என்ற ஆணுக்கும் தேஜ்மண்டல் சரிவர சம்பளம் வழங்காமல் கொடுமைப் படுத்தியதாகக் கூறப்படுகிறது.

**முக்கோணக் காதலும் திட்டமிட்ட கொலையும்:**

சம்பள பாக்கி ஒருபுறமிருக்க, நிஷியின் கணவனான லுப்லுவுக்கும் தேஜ்மண்டலுக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த நிஷி மற்றும் அவரது கூட்டாளிகள் தேஜ்மண்டலைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர். கடந்த 2021 அக்டோபர் மாதம் பிரதாப் சென்னை சென்றிருந்த சமயம் பார்த்து, நள்ளிரவில் வீட்டிற்குள் புகுந்த நால்வரும் தேஜ்மண்டலின் கை, கால்களைச் சேலையால் கட்டி, மூச்சுத்திணறடித்துக் கொடூரமாகக் கொலை செய்தனர். பின்னர் உடலை ஒரு டிராலி சூட்கேஸில் அடைத்து வைத்துவிட்டு, வீட்டிலிருந்த பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச் சென்றனர். தகவல் அறிந்து வந்த அஸ்தம்பட்டி போலீசார், உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

**5 ஆண்டுகள் மறைவு வாழ்க்கையும் அதிரடி கைதும்:**

கொலை நடந்தவுடன் குற்றவாளிகள் நால்வரும் எல்லை தாண்டி வங்கதேசத்திற்குத் தப்பிச் சென்றனர். இதற்கிடையே, உடலை வாங்க உறவினர்கள் யாரும் வராததால் தேஜ்மண்டலின் சடலம் 250 நாட்களுக்கும் மேலாக அரசு மருத்துவமனை பிணவறையிலேயே வைக்கப்படிருந்தது. இந்நிலையில், முக்கிய குற்றவாளியான நிஷி தனது அடையாளத்தை மாற்றிக் கொண்டு மீண்டும் இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்து, மகாராஷ்டிர மாநிலம் புனேவில் கர்நாடகாவைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். ரகசியத் தகவலின் பேரில் அங்கு விரைந்த சேலம் தனிப்படை போலீசார், நிஷியை அதிரடியாகக் கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள மற்ற 3 பேரையும் சர்வதேச எல்லைப் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பிடிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# சேலத்தில் பெண்களை ஏமாற்றி ஆபாச வீடியோ எடுத்த விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ரகுபதி போட்ட பகீர் குண்டு.



சேலம். செப்.24–

சேலத்தில் 50 க்கும் மேற்பட்ட பெண்களை ஏமாற்றி ஆபாச வீடியோ எடுத்ததாக குற்றச்சாட்டுக்கு உள்ளான தவெக நிர்வாகி மணிகண்டன் விவகாரம் மீண்டும் அரசியல் களத்தில் பேசுபொருளாகியுள்ளது.

இந்த வழக்கில் மணிகண்டனை மட்டும் கைது செய்துவிட்டு, அவருக்குப் பின்னால் இருப்பதாகக் கூறப்படும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என முன்னாள் அமைச்சர் ரகுபதி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அவர், மணிகண்டன் பல பெண்களை ஏமாற்றி மிரட்டி வீடியோக்களை எடுத்ததாக கூறப்படும் நிலையில், இதன் பின்னணியில் ஒரு பெரிய கும்பல் இருக்கலாம் என தெரிவித்தார். உண்மையில் தொடர்புடைய அனைவரையும் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மணிகண்டன் வழக்கில் பின்னணி கும்பல் குறித்து கேள்வி

மணிகண்டன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு துணையாக இருந்ததாகக் கூறப்படும் நபர்கள் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என்பதே ரகுபதியின் குற்றச்சாட்டு. தவெக நிர்வாகிகள் மீது தொடர்ந்து பாலியல் புகார்கள் எழுவதாகவும், பாதிக்கப்பட்ட பெண்களுடன் சமரசம் பேசும் நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் விமர்சித்தார். இவை ரகுபதி முன்வைத்த அரசியல் குற்றச்சாட்டுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சேலம் விவகாரத்தில் 50 க்கும் மேற்பட்ட பெண்களை ஏமாற்றி ஆபாச வீடியோக்களை எடுத்ததாக மணிகண்டன் மீது குற்றச்சாட்டு எழுந்து, போலீசார் அவரை கைது செய்தது தொடர்பாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜெம் வீரமணி வழக்கு குறித்து ரகுபதி விளக்கம்

இதனிடையே, ஜெம் கிரானைட்ஸ் வீரமணி மீதான போக்சோ வழக்கில் திமுக அரசு அவரைக் காப்பாற்ற முயன்றதாக தவெக தரப்பில் கூறப்பட்ட குற்றச்சாட்டையும் ரகுபதி மறுத்தார். புகார் கிடைத்த பின்னர் வழக்குப் பதிவு செய்யப்பட்டதாகவும், கிடைத்த வீடியோ ஆதாரங்கள் தெளிவாக இல்லாததால் அடுத்தகட்ட நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் விளக்கமளித்தார். வழக்கை திரும்பப் பெற நீதிமன்றத்தில் கோரவில்லை என்றும் தெரிவித்தார்.

மணிகண்டன் வழக்கு தொடர்பாகவும், வீரமணி மீதான போக்சோ வழக்கு தொடர்பாகவும் சட்டப்படி விசாரணை நடத்தப்பட்டு வருவதாக ரகுபதி கூறினார். புதிய ஆதாரங்கள் மற்றும் வலுவான சாட்சியங்கள் கிடைத்தால் வீரமணி வழக்கில் அடுத்தகட்ட நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் குற்றச்சாட்டுகளால் தீவிரமடையும் விவாதம்

வீரமணி வழக்கில் நடவடிக்கைகள் குறித்து திமுக மற்றும் தவெக தரப்பினர் மாறுபட்ட கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையே, வழக்கில் தொடர்புடைய அனைவரிடமும் விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ரகுபதி முன்வைத்துள்ளார். வழக்கின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் நீதிமன்றம் மற்றும் விசாரணை அமைப்புகளின் செயல்பாடுகளைப் பொறுத்தே அமையும்.

இவ்வாறு சேலம் மணிகண்டன் வழக்கும், ஜெம் வீரமணி மீதான போக்சோ வழக்கும் தமிழக அரசியலில் பரஸ்பர குற்றச்சாட்டுகளுக்கு இடையே தொடர்ந்து விவாதப் பொருளாகி வருகின்றன. இரு விவகாரங்களிலும் அதிகாரப்பூர்வ விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் வெளியாகும் தகவல்களே முழுமையான நிலவரத்தை தெளிவுபடுத்தும்.

# ஈரோடு வில்லரசம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் பிரசவம்: தம்பதியருக்கு அரசு பரிசுப் பெட்டகத்தை வழங்கிய மாமன்ற உறுப்பினர்!



ஈரோடு. செப். 24

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 10 வது வார்டு பகுதி வில்லரசம்பட்டியில் பொது மக்களின் மருத்துவத் தேவைகளுக்காக அண்மையில் புதிதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. நவீன வசதிகளுடன் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனையில் அப்பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் தொடர் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நாகலட்சுமி தமிழ்ச்செல்வன் தம்பதியினருக்கு மருத்துவர்களின் முறையான கண்காணிப்பில் சுகப்பிரசவத்தில் குழந்தை பிறந்தது. புதிதாகத் திறக்கப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிகழ்ந்த முதல் பிரசவம் இது என்பதால் மருத்துவமனை வளாகத்தில் மகிழ்ச்சி நிலவியது.

இதனைத் தொடர்ந்து, பிறந்த குழந்தையையும் தாயையும் வாழ்த்தி தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் குழந்தைப் பராமரிப்புப் பரிசுப் பெட்டகம் (அம்மா பேபி கேர் கிட்) வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி 10 வது வார்டு மாமன்ற உறுப்பினர் குமரவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, நாகலட்சுமி தமிழ்ச்செல்வன் தம்பதியினருக்கு தமிழ்நாடு அரசின் பரிசுப் பெட்டகத்தை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும், பொது மக்களுக்குத் தரமான மருத்துவ சேவை வழங்கி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மாமன்ற உறுப்பினர் பாராட்டு தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது ஆரம்ப சுகாதார நிலைய தலைமை மருத்துவர், செவிலியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் வார்டு பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

# மாணவி நர்மதா உயிரிழந்த சம்பவத்தில் நீதி கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்.



கள்ளக்குறிச்சி செப் 24

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டம், தெங்கியாநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்ற மாணவி நர்மதா உயிரிழந்த சம்பவத்தில் நீதி கோரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கஜேந்திரன் தலைமை தாங்கினார். இதில், மாணவி நர்மதா உயிரிழப்பு குறித்து உரிய விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், நர்மதாவின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

# குஜிலியம்பாறையில் பெண்ணிடம் நகை பறித்து தப்பி ஓடிய 2 பேர் கைது வாகன சோதனையில் சிக்கினர்



குஜிலியம்பாறை, செப்.24

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை கிருஷ்ணா நகரை சேர்ந்தவர் ராஜாராம். இவரது மனைவி ராஜலட்சுமி (வயது 54). இவர் குஜிலியம்பாறை ஈசநத்தம் சாலையில் நல்லாக்கவுண்டன்பட்டி பிரிவில் மளிகை கடை வைத்துள்ளார்.

ராஜலட்சுமி கடந்த 9ந்தேதி கடையில் தனியாக இருந்து வியாபாரம் பார்த்து வந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் 2 பேர் வந்தனர். அதில் ஹெல்மெட் அணிந்து ஒருவனும், கைகுட்டையால் முகத்தை கட்டியவாறு மற்றொருவனும் இருந்துள்ளனர். இந்த நிலையில் கைகுட்டையால் முகத்தை கட்டி இருந்தவன் மளிகை கடைக்கு சென்று தண்ணீர் பாட்டில் கேட்டுள்ளான். இதையடுத்து ராஜலட்சுமி தண்ணீர் பாட்டில் எடுக்க உள்ளே சென்றபோது கடைக்குள்

மர்மநபர் நுழைந்த ராஜலட்சுமி அணிந்து இருந்த 5 பவுன் தங்க செயினை பறித்துள்ளான். இதனால் அதிர்ச்சியடைந்த ராஜலட்சுமி செயினை இறுக பிடித்துள்ளார். இதில் அந்த செயின் அறுந்தது. இதில் 3 பவுன் தாலி செயின் மர்ம நபர் கையில் சிக்கியது. கையில் கிடைத்த தாலி செயினை எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் மர்ம

நபர்கள் அங்கிருந்து தப்பியோடினர். திருட்டு சம்பவம் சம்பந்தமாக குஜிலியம்பாறை

போலீசில் கொடுக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து புகார் டி.எஸ்.பி. சுரேஷ் பாண்டியன் தலைமையில் குஜிலியம்பாறை இன்ஸ்பெக்டர் ராஜா மற்றும் தனிப்படை போலீசார்

தப்பியோடிய நர்ம நபர்களை தேடி வந்தனர். இந்த நிலையில் பாளையம் செக்போஸ்ட் அருகே வாகன சோதனையில் போலீசார் ஈடுபட்டிருந்தனர். அங்கே அப்போது சந்தேகத்துக்குரிய 2 நபர்களை பிடித்து விசாரணை செய்தனர். விசாரணையில் அவர்கள் ராஜலட்சுமியிடம் நகை பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது. மேலும் விசாரணை மேற்கொண்டதில் நகை பறிப்பில் ஈடுபட்டவர்கள் கரூர் மாவட்டம், கருப்பாத்துரையை சேர்ந்த மாரிமுத்து மகன் மாணிக்கம் (28), கரூர் மாவட்டம், கருங்காலப்பள்ளியை சேர்ந்த ராமன் மகன் பாரதிதாசன் (23) என்பது தெரியவந்தது. பின்னர் போலீசார் அவர்களை கைது செய்தனர். பின்னர் அவர்கள் வேடசந்தூர் கிளை சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கி பிரசவ கால விழிப்புணர்வு நிகழ்ச்சி..

## ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்டது..



ஈரோடு. செப். 24

ஈரோடு மாவட்டம் கணபதிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு, அவர்களுக்கு பிரசவ கால விழிப்புணர்வு குறித்த ஆலோசனை வழங்கப்பட்டது. ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்ட இந்த விழாவில் ஏராளமான கர்ப்பிணி பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளையின் சார்பில், ஈரோடு மாவட்டம் கணபதி பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் விழாவும், அவர்களுக்கான பிரசவ கால ஆலோசனைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட இருபதுக்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு, கடலை மிட்டாய், சத்துமாவு உள்ளிட் ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கி, பிரசவ கால ஆலோசனைகளையும், ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் சாந்தா தேவி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கணபதிபாளையம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் டாக்டர் அன்பு செல்வி மற்றும் மொடக்குறிச்சி கூட்டுறவு வங்கி அதிகாரிகள் தேவகி, சுமதி, மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள், அங்கன்வாடி ஊழியர் கள், காக்கும் கரங்கள் மக்கள் நல அறக் கட்டளையின் நிர்வாகி கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு பாஜக மேலிடப் பொறுப்பாளராக ராம் மாதவ் நியமனம்

சென்னை; செப்.24

தமிழ்நாடு பாஜகவுக்கு மேலிடப் பொறுப்பாளர்களை நியமனம் செய்து அக்கட்சியின் தேசிய தலைமை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு பாஜக மேலிடப் பொறுப்பாளராக ராம் மாதவ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு பாஜக இணை பொறுப்பாளர்களாக நிர்மல் குமார் சுரானா, டி.கே.அருணா ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

# தெருவில் வசிக்கும் நாய்களை பாதுகாக்க மாவட்ட ஆட்சியரிடம் மனு



கோவை செப்:24

தெருவில் வாழும் நாய்களின் ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் கொடுமையான மரணத்திற்கு சமமானது பாலியல் கொடுமை கொடூரமான ஆயுதங்களால் தாக்கி காயப்படுத்துவது விஷம் வைத்துக் கொள்ளப் படுவது போன்ற சம்பவங்கள் நடக்கின்றன சட்டத்திற்கு புறம்பாக பயிற்சி இல்லாத மனசாட்சி இல்லாத ஆட்களை வைத்து கால்களை உடைத்து உடலில் காயப்படுத்தி சித்திரவதைகள் செய்து நாய்களைப் பிடித்து ஊனப்படுத்தி குப்பை ஏற்றுவது போல் ஏதோ ஒரு வாகனத்தில் ஏற்றி குப்பைமேடுகளிலும் காடுகளிலும் மற்ற ஊர்களிலும் கொண்டுபோய் கொட்டுகிறார்கள்.

இதனால் தெருவில் வாழும் நாய்களின் வாழ்க்கைக்கு நிரந்தர செயல் திட்டத்தை அமைத்துக் கொடுத்து இந்தியாவிற்கு முன்மாதிரியாக நம் தமிழகம் திகழ வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

# நாமக்கல்லில் டெங்கு தடுப்பு நடவடிக்கை கொசுப்புழு உற்பத்திக்கு காரணமான கடைகளுக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

நாமக்கல் : நாமக்கல்லில், டெங்கு தடுப்பு நடவடிக்கையாக கொசுப்புழு கண்டறியப்பட்ட பழைய இரும்பு, டயர் கடைகளுக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. நாமக்கல் நகரில், கடந்த இரு வாரங்களாக விட்டுவிட்டு மழை பெய்து வருவதால், மழைக்கால நோய் தடுப்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

தேங்கும் நீரில் டெங்கு பரப்பும், ஏடிஸ் கொசுப் புழுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மாநகராட்சி ஆணையாளர் செல்வபாலாஜி உத்தரவின்பேரில், சுகாதார அலுவலர் திருமூர்த்தி தலைமையில், மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பல்வேறு பகுதிகளில், நேற்று அதிரடி ஆய்வு மேற்கொண்டனர்.

பவுண்டு தெரு, டயர் மார்க்கெட் மற்றும் சேலம் ரோடு, பரமத்தி சாலை, பொய்யேறி கரை ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பழைய இரும்பு கடைகள், டயர் கடைகள் மற்றும் பள்ளிகளில் நேற்று தீவிர ஆய்வு நடத்தப் பட்டது. பழைய இரும்புப் பொருட்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள் மற்றும் டயர்களில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழுக்கள் உள்ளதா என சோதனை செய்யப்பட்டது. இந்த ஆய்வின்போது, 15 டயர் கடைகள் மற்றும் 10 பழைய இரும்பு கடைகள் சோதனை செய்யப் பட்டன. அங்கு தண்ணீர் தேங்கி கொசுப்புழுக்கள் உற்பத்தியாகியிருந்த டயர்கள் மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விதிகளை மீறி கொசுப்புழுக்கள் வளரச்சூழ்நிலை உருவாக்கிய சம்மந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ. 25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த ஆய்வில், துப்புரவு ஆய்வாளர்கள் பாஸ்கர், செல்வகுமார், ஜான் ராஜா, களப்பணி உதவியாளர் சபரிநாதன், தூய்மைப் பணி மேற்பார்வையாளர் ஜெயராமன், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992